**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,**
**SIRKALI**
**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
**Case No. C.C. 187/2021**

**Deposition of witness** **Prosecution : P.W- , L.W-7**

| | | | |
|---|---|---|---|
| Name | : வா.குமார்(SI) | Defence | : |
| Father Name | : **வாசு** | Court | : |
| Village | : ஆணைக்காரன் சத்திரம் காவல் நிலையம் | Taluk | :Sirkali |
| Calling | : | Religion | : |
| Age | : 56/2025 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day **17.02.2025.**

**முதல் விசாரணை**

நான் ஆணைக்காரன் சத்திரம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்துவருகிறேன். கடந்த 26.12.2020 தேதி சீர்காழி காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக நான் பணியில் இருந்தபோது சீர்காழி வா.உ.சி நகரை சேர்ந்த சண்முகநாதன் மனைவி மாரியம்மாள் வயது 45 என்பவர் மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சையில் இருப்பதாக கிடைத்த தகவலை பெற்று அங்கு சென்று விசாரித்து வாக்குமூலம் பெற்று நிலையம் வந்து விசாரணை செய்ததில் சம்பவம் உண்மை என தெரியவந்ததால் சீர்காழி காவல் நிலைய குற்ற எண். 1560/2020 பிரிவு 294(b), 323, 506(ii) IPC யாக வழக்கு பதிவு செய்தேன். அ.சா.1 கொடுத்த புகார் வாக்குமூலம் அ.சா.1ன் மூலம் அ.சா.ஆ.1 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. அச்சு **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. வழக்கினை மேல் விசாரணைக்காக உதவி ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன் உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரிகள் 2, 4 தரப்பில் குறுக்கு விசாரணை**

சம்பவம் நடந்த மறுநாள்தான் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். காலதாமதமாக வழக்கு பதிவு செய்யப்பட்ட விபரத்தை முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். புகார்தாரருக்கும் எதிரிகளுக்கும் இடையில் முன்விரோதம் உள்ளதாக புகார்தாரர் புகார் மனுவில் கூறியுள்ளார் என்றால் சரிதான். என்ன முன்விரோதம் என்று புகார் மனுவில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். சீர்காழி காவல் நிலையத்தில் புகார்தாரின் கணவர் சண்முகம் என்பவர் மீது புகார்தாரரின் மாமியார் புகார் கொடுத்து முதல் தகவல் அறிக்கை எண். 1558/2020 பிரிவுகள் 294(b), 352, 506(ii) வழக்கு பதிவு செய்தது நான் தான் என்றால் சரிதான். அந்த வழக்கு பதிவு செய்தது 25.12.2020 என்றால் சரிதான். அந்த வழக்கில் புகார்தாரரின் கணவர் கைதுசெய்யப்பட்டாரா என்ற விபரம் எனக்கு தெரியாது. புகார்தாரர் சொல்வதுபோல் எந்த ஒரு சம்பவமும் நடைபெறவில்லை கணவர்மீது கொடுக்கப்பட்ட புகாரில் வாபஷ்பெறவேண்டி எதிரிகள் மீது பொய்யாக கொடுக்கப்பட்ட புகாரை சரியாக விசாரணை செய்யாமல் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. புகார் தாரரின் கணவர் மீது பதிவு செய்யப்பட்டுள்ள மேற்படி வழக்கில் புகார்தாரர் தனது மற்ற மகன்களுக்கும், மகள்களுக்கும் சொத்துக்களை பிரித்து தருமாறு கேட்டதால் பரச்சனை ஏற்பட்டு வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்கிற்கும் எங்களுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**A1 , A3 க்கு இந்த குறுக்கு விசாரணை ஏற்றுக் கொள்ளப்பட்டது.**